www.tamilarangam.net

# பாசிசப் புலிகளின் வதைமுகாம்

ஒரு தனிமனிதன் புலிகளினால் அனுபவித்த சித்திரவதைகள் தகவலாக எமக்கு ஈழத்தில் உள்ள நண்பர்கள் சிலர் அனுப்பி வைத்துள்ளார்கள். இதில் சம்பந்தப்பட்ட மனிதனது கடந்த கால நடவடிக்கைகள் தொடர்பான விமர்சனங்களிற்கு அப்பால், சித்திரவதைகளையும் அதன் கொடூரங்களையும் அம்பலப்படுத்தும் நோக்கில் இதனை ஒரு பிரசுரமாகத் தருகின்றோம்.

இச் சித்திரவதைகள், பழைய இயக்க உறுப்பினர்களிற்கு மட்டுமல்ல, ஜனநாயகத்திற்காக குரல் கொடுத்தவர்கள், புலியின் அடக்குமுறைகளிற்கு எதிரானவர்கள், போராட்டத்தின் வழிமுறை தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தவர்கள். அடிப்படை வாழ்வு சம்பந்தமாக சிறுகாரணங்களிற்காக புலியுடன் முரண்பட்டவர்கள், இவ்வாறாக 5000 இற்கும் மேற்பட்ட கைதிகள் புலிகளின் கோரப்-பிடிக்குள் சிக்கித் தவிக்கின்றனர். புலிகளால் தெருத் தெருவாக கொலை செய்து வீசப்பட்ட ஆயிரக்கணக்கான மனித உயிர்களிற்கும், நாளாந்தம் சித்திரவதைகளை அனுபவிக்கும் தேசபக்தர்களிற்கும் வரலாறு நிச்சயம் பதில் சொல்லும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் ரெலோ இயக்கத்தில் உறுப்பினராக இருந்து எனது சொந்தக் காரணங்களுக்காக
இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னர் ரெலோ இயக்கத்தின்
இருந்து வெளியேறினேன். பின்னர் ஒரு வாகனம் வாங்கி இருந்தேன்.

1990ம் ஆண்டு ஜுலை மாதம் 25ம் திகதியன்று பகல் 12 மணியளவில் நான் பிளவுஸ்
கடையில் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ஆயுதம் தாங்கிய இருவர் நான்
சாப்பிட்டுக்கொண்டிருந்த கடைக்கு வந்து உன்னை பொன் மாஸ்டர் வந்து சந்திக்கும்படி
கூறியதாக என்னை அழைத்துச் சென்றனர். என்னை பொன்மாஸ்டர் முகாமில் விட்டுவிட்டு
ஆரியகுளத்தடியில் நின்ற என்னுடைய வானையும் எடுத்துவந்து முகாமில் விட்டனர். நாங்கள்
முகாமுக்கு சென்றபோது பொன்மாஸ்டர் முகாமில் இல்லை. நான் முதல் நாள் வவுனியா
விலிருந்து யாழ்ப்பாணம் சென்றதால் இரவு நித்திரை இல்லை. எனவே பொன்மாஸ்டர்
வரும்வரை நான் எனது வாகனத்தில் நித்திரை கொள்வதாக கேட்டேன். அப்போது
நேரம் பி.ப.2மணி அவர்கள் அனுமதி பெற்று நித்திரை கொண்டேன். மாலை 5 மணிக்கு
பொன் மாஸ்டர் வந்துவிட்டதாகக் கூறி என்னை எழுப்பினர்.

பொன் மாஸ்டர் என்னை அழைத்து உங்களை ஒருவர் சந்திக்கவேண்டும் எனக் கூறினார்.
அவர் வரும்வரை இருங்கள் எனக்கூறி ஓர் அறையில் கதிரை ஒன்றைப்போட்டு இருக்க
விட்டனர். இரவு 7மணிவரை என்னைச் சந்திக்க ஒருவரும் வரவில்லை. எனவே நான் எனது
வீட்டுக்கு ~~ஒமன~~ போய்விட்டு நாளை வருகிறேன் வாகனம் இங்கேயே நிற்கட்டும் என
அவர்களிடம் கேட்டேன். அவர்கள் அனுமதிக்கவில்லை. 9 மணிக்கு என்னைக் கூட்டிச் சென்று
ஒரு அறையில் படுக்கவிட்டார்கள். நான் படுத்துவிட்டேன். 11 மணிக்கு என்னை எழுப்பி
உணவு தந்தார்கள்.

மறுநாள் 26ம் திகதி காலை எழுப்பி முகம் கழுவும்படி கொண்டுபோய் விட்டார்கள். காலை
8 மணி இருக்கும் ஒரு வெள்ளை வானில் வந்த உயர்ந்த ஒருவர் பொன்மாஸ்டரிடம் பேசிவிட்டு
டேய் வாடா என்று என்னை அழைத்து தான் கொண்டுவந்த வானில் ஏற்றி குப்புறப்படுக்கும்படி
கூறினார். நான் வானில் ஏறும்போது வானில் வேறு ஒரு வாலிபனும் குப்புறப்படுத்தபடி
இருந்தார். நானும் அவருக்குப் பக்கத்தில் குப்புறப்படுத்தேன். வான் புறப்பட்டு சுமார்
15 நிமிடங்களின் பின்னர் வான் ஓர் இடத்தில் நின்றது.

வான் நின்ற இடத்தில் ஒரு அழகான மாடி வீடு. அந்த வீட்டின் ஓர் அறையில் என்னை
விட்டு பூட்டினர். அந்த வீட்டில் 10 அறைகள் இருப்பதை நான் உள்ளே நுழையும்போது
அவதானித்தேன். என்னை விட்டு பூட்டிய அறையில் மேலும் 15 பேர் இருந்தனர்.

நான் அறைக்குள் விடப்பட்டு சுமார் இரண்டு மணிநேரம் வரை அந்த அறையில் இருந்த
எவருமே என்னுடன் பேசவில்லை. நானே முதலில் அவர்களுடன் பேசத் தொடங்கினேன்.
நீங்கள் எப்போது பிடிக்கப்பட்டீர்கள் என அவர்களை வினவினேன். அவர்கள் 5 முதல்
10 நாட்கள் வரை பல மாதிரி கூறினர். எந்த இடத்தில் இருக்கிறோம். எனக் கேட்டேன்.
அவர்கள் தமக்கு இடம் தெரியவில்லை எனவும் அடிக்கடி கோவில் மணிஓசை கேட்பதாகவும்
கூறினர். அந்தக் காலத்தில் நல்லூர் கோவிலில் திருவிழா நடைபெற்றதால் அடிக்கடி
மணி ஓசை கேட்டதாலும் நாம் அடைக்கப்பட்ட இடம் நல்லூர் கோவிலுக்கு கிட்டிய இடம்
என உணர்ந்து கொண்டேன். பி.ப.3 மணி இருக்கும் 15 வயதுடைய பையன் துப்பாக்கியுடன்
வந்து சிறுநீர் கழிக்கப்போகிறீர்களா எனக் கேட்டு இருவர் இருவராக கூட்டிச் சென்றார்.
அப்போது யாராவது தப்பி ஓட முயன்றால் தலை பறக்கும் என எச்சரித்தார். அந்த
வீட்டில் இயக்கத்தை சேர்ந்த 50 பேர் வரை இருந்தனர். 5 மணிக்கு ஒருவர் வந்து
என்னை அழைத்துச் சென்றார். அந்த அறையில் என்னை அழைத்து வந்த உயரமானவர்
இருந்தார்.

என்னைக் கண்டதும் டேய் நீ யாரிடம் வான் வாங்கினாய். உ உனது நறவர் (சாரதி)
எங்கே என்று கடுமையாக கேட்டார். நான் வான் வாங்கிய நபர் பெயர் முகவரி
வாங்கிய விலை போன்ற விபரங்களைக் கொடுத்தேன். பின்னர் நான் முன்னர் இருந்த
இயக்கம் எனது.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரைவரின் பெயர் வீட்டு விலாசம் அனைத்து விபரங்களையும் கேட்டு நான் கொடுத்தேன். அதன் பின்னர் எங்கேயடா இவ்வளவு நாளும் மாட்டுப்படாமல் இருந்தநீங்கள் என்று கூறி பெரிய கொட்டன் தடியால் அடித்துவிட்டு பழைய அறையில் மீண்டும் அடைத்து வைத்தனர். 27ம் திகதி காலை சுமார் எட்டு மணியிருக்கும் முன்னர் என்னை என்னை அந்த இடத்துக்கு கொண்டு சென்ற உயரமானவர் வந்து எனது வாகனத்திலேயே என்னை ஏற்றி குப்புறப்படுக்கும் படி கூறினார். நான் சீற்றுக்கு இடையே குப்புறப்படுத்துவிட்டேன். 10 நிமிட நேர [illegible] பயணத்தின் பின்னர் என்னை எழுந்திருக்கச் சொன்னார். அப்போது வாகனம் யாழ் ஸ்ரான்லி வீதியில் சென்று கொண்டிருந்தது. ரைவரின் வீட்டைக் காட்டும்படியும் விசாரித்துவிட்டு விடுவதாகவும் கூறினர் ரைவரின் வீடு மல்லாகத்தில் இருப்பதாக கூறி அவர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டினேன். என்னை வாகனத்தில் இருக்கும்படி கூறிவிட்டு ரைவரை அவருடைய அக்காவிடம் விசாரித்தனர். அங்கு ரைவர் இல்லாததால் அவர் வந்ததும் பொன் மாஸ்டரின் முகாமுக்கு வரும்படி கூறிவிட்டு புறப்பட்டனர். வேறு எந்த இடத்துக்கு ரைவர் போவான் எனக் கேட்டனர். யாழ் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் உள்ள இன்னொரு அக்காவின் வீட்டைக் காட்டினேன். அங்கும் அவர் இல்லாததால் முகாமுக்கு வரும்படி கூறிவிட்டு வந்தனர். பல்கலைக்கழகத்துக்கு இடையே வாகனம் வந்ததும் மீண்டும் என்னைக் குப்புறப்படுக்கும்படி கூறி என்னை பழைய வீட்டுக்கே கூட்டிச் சென்றனர்.

28ம் திகதி ரைவரையும் அதே மாடி வீட்டுக்கு கொண்டு வந்தனர். இவன் உன் ரைவரா என்று என்னைக் கேட்டனர். நான் ஓம் என்றதும் இருவருக்கும் அடித்தார்கள்.

29ம் திகதி காலை 10 மணியாளவில் இரண்டு பேரையும் கண்ணைக் கட்டிக்கொண்டு போய் வேறு ஒரு வீட்டில் விட்டார்கள். அந்த வீடு பழைய கட்டிடம். ஆனால் அங்கும் பல அறைகள் இருந்தன எங்களை கொண்டு சென்று வீட்டுக்[illegible] காலில் இருத்தினர். அங்கே 15 முதல் 18 வயதுக்கிடைப்பட்ட 10 பேர் நின்றனர். எல்லாரிடமும் பொல்லு இருந்ததும். அவர்கள் எங்களை எந்த இயக்கம், எந்த ஊர் என்ன குற்றம் செய்தீர்கள் எனக் கேட்டு எங்களுடைய உடைகளை கழட்டி சாரத்துடன் இருவரையும் தனித்தனியாக அடைத்தனர். 10அடி நீளம் 10அடி அகலம் உள்ள அந்த அறைகளில் 30 பேர்வரை அடைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஒரு மாதம் தொடக்கம் இரண்டு மாதத்திற்குள் கொண்டு வந்து அடைக்கப்பட்டவர்கள் என தெரிய வந்தது. அவர்களுடன் கதைத்தபோது அவர்கள் என்னை உள்ளதை சொல்லிவிடும்படியும் இல்லையெனில் இறைச்சிக்கடைக்கு கொண்டு போவார்கள் எனவும் அங்கே போனால் உயிருடன் திரும்பமுடியாது எனவும் கூறினர்.

2ம் திகதி 11 மணியளவில் டேய் யாரடா ரெலோ ராஜன் எனக் கேட்டவாறு கதவுகளில் அடித்துக்கொண்டு வந்தார்கள். நான் அந்த வீட்டுக்கு போன அன்றே எனக்கு கைதி இலக்கம் தரப்பட்டுவிட்டது. ஆனால் என்னை பேரை சொல்லி கூப்பிட்டு ஒரு தூணில் கட்டினர். அங்கே ரைவர் நிர்வாணமான நிலையில் அடிகாயங்களுடன் நிலத்தில் பேச்சு மூச்சு இன்றி கிடத்தப்பட்டிருந்தார். என்னை தூணில் கட்டியதும் டேய் ரைவர் செத்துவிட்டான் நீயும் சாகப்போகிறாய், உள்ளதை சொல் என்று கூறி நான்கு பேர் என்னை பொல்லால் அடித்தார்கள். இந்த நால்வருக்கும் வயது 15க்கு மேல் இருக்காது. அவர்கள் என்னிடம் டேய் நீ எந்த இயக்கம் யாரைக் காட்டிக்கொடுத்தாய் ஆயுதம் எங்கே வைத்திருக்கிறாய் எத்தனை பேரைச் சுட்டாய் எத்தனை வீடு கொள்ளையடித்தாய் என்று கேட்டு அடித்தார்கள் நான் ஒன்றிலும் ஈடுபடவில்லை எனக் கூறினேன். அவர்கள் நான் மயங்கும்வரை அடித்தார்கள்.
~~3ம்திகதி~~
3ம் திகதி காலை என்னைக் கூப்பிட்டார்கள் ரைவர் எல்லாம் சொல்லிவிட்டான். நீயும் உண்மையை சொல்லுகிறாயா அல்லது அடி வாங்கி சாகப்போகிறாயா எனக் கேட்டு எனது வாய்க்குள் பெரிய கட்டையை ஓட்டினார்கள். ஒருவன் ஓட்ட மற்றவர்கள் சிரித்தார்கள். இப்படி சித்திரவதை செய்து எனது முகவரி தாய் தந்தையர் அவர்களுடைய சகோதரங்கள் பற்றிய விபரங்கள் அவர்களுடைய பிள்ளைகள் பற்றிய விபரங்கள் தாய்வழி தந்தைவழி பரம்பரை விபரங்கள் அனைத்தும் கேட்டனர். நான் பிறந்த திகதி படித்த பாடசாலை இயக்கத்தில் நான் செய்த பணிகள் இயக்கத்தில் இருப்பவர்கள் பெயர்கள் ஏனைய இயக்கத்தில் உள்ளவர்கள் பெயர்கள் போன்ற விபரங்களை கேட்டு சுமார் 30 பக்கம் கொண்டு வாக்கு மூலம் எடுத்தனர். வாக்கு மூலம் எடுத்தவர் திருமலையை சேர்ந்த கௌதமன் என்பவர்.

அந்த சிறையில் இருந்தபோது காலை மாலை மலசலம் கழிக்க வெளியே விடுவார்கள். ஏனைய நேரங்களில் அடிக்கடி வந்து 15 வயது சிறுவர்கள் பொல்லால் அடிப்பார்கள்.

10ம் திகதி காலை சங்கிலி போடாதவர்கள் எல்லாம் வா என எல்லா அறைகளிலும் இருந்தவர்களையும் அழைத்துச் சென்றனர். அங்கு இருந்தவர்களில் 35 பேருக்கு சங்கிலி போடவில்லை. அனைவரையும் வரிசையாக நிற்கும்படி கூறி கண்களைக் கட்டினார்கள்.

....../3

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு செல்லப்பட்டு ஓரிடத்தில் இறக்கப்பட்
10 பேராக வாகனத்தில் ஏற்றப்பட்டு லொறி சங்கிலியால் காலில் போட்டு காஸ்
டோம். அங்கு 6 குண்டுகள் போடப்பட்ட பழைய இடத்துக்கு கொண்டு சென்றார்கள்.
மூலம் ஒட்டினார்கள். பின்னர் 3 மணியாளவில் கண்களைக் கட்டினார்கள். ஒரு மணி நேரத்
மாலை 35 பேரையும் வரிசையாக இருக்கவிட்டு ஒருவர் சாரத்தை ஒருவர் பிடித்தபடி
பின்னர் ஒரு அலுமினியம் பொடி அடித்த வானில் கொண்டு சென்றனர். வான் சுமார் இரண்டு மணி
சென்று ஏறும்படி ஏற்றி வேறு இடத்துக்கு கொண்டு சென்றனர். வான் ஓடிய வேகத்திலும் நேரத்திலும் இருந்து
நேரப் பயணத்தின் பின் ஓரிடத்தில் நின்றது. வான் ஓடிய வேகத்திலும் 20மைல் தூரத்துக்கப்பால் வந்துவிட்டோம் என
நாம் முன்னர் இருந்த இடத்திலிருந்து 20மைல் தூரத்துக்கப்பால் வந்துவிட்டோம் என
தீர்மானிக்கமுடிந்தது.

வான் நின்றதும் எல்லோரையும் இறங்கும்படி ஒருவர் கூறினார். அப்போது இந்தச் சனியங்க
ளுக்கு சங்கிலி இருக்கா என ஒருவர் கேட்க ஓம் என இன்னொருவர் பதிலளித்தது கேட்டது.
அதே நேரம் நாம் ஒவ்வொருவரும் இறங்க, இறங்க பச்சை பனை மட்டையால் ஒவ்வொரு
அடி விழுந்தது. பின்னர் ஒருவரை ஒருவர் பிடிக்கும்படி கூறினர். எங்களை ஒரு வீட்டின்
படியால் ஏறச் சொன்னார்கள். படிகளில் ஒவ்வொவருவரும் ஏறஏற அடி விழுந்தது. போடா
உள்ளே எனக் கூறிச் சிரித்தார்கள். உள்ளே போனதும் கண்களை அவிட்டுவிட்டார்கள்.
பின்னர் எல்லோரையும் வட்டமாக இருக்கவிட்டு எங்கள் கால்களில் ஒட்டிய சங்கிலிகளுக்கூடாக
ஒரு பெரிய சங்கிலியைக் கோர்த்து வரிசையாக நிற்க வைத்துவிட்டு போய்விட்டார்கள்.
சில மணி நேரத்தில் அவர்கள் எங்கள் 35 பேரையும் 15 அடி நீளம் 10 அடி அகலம்
கொண்ட ஒரு அறையில் படுக்கவிட்டார்கள். ஆனால் 10ம் திகதி காலை உணவுக்குப் பின்னர்
எமக்கு உணவுதரப்படவில்லை.

11ம் திகதி காலையில் வந்த ஒருவர் காலில் கோர்த்திருந்த சங்கிலியை களட்டினர். அந்த
முகாமில் 20 பேர்வரை புலிகள் இருந்தனர். இவர்கள் அனைவரும் ஒவ்வொருவராக வந்து
நீ எந்த இயக்கம் எந்த ஊர் எனக் கேட்டு மட்டையால் அடித்துவிட்டுப் போவார்கள்.
8 மணிக்கு எங்களை இருவர் இருவராக காலைக்கடன் முடிக்க அழைத்துச் சென்றனர்.

அப்போ தான் அந்த முகாமின் பயங்கரத் தன்மையை காண முடிந்தது.

<u>முகாமின் தோற்றம்</u>.
ஜன சஞ்சாரமற்ற வெளியில் அமைந்த ஒரு பெரிய தென்னந்தோட்டம். அதில் பெரிய
கல்வீடு. அதனருகே 30அடி நீளம் 10அடி அகலம் 8 அடி உயரமான கட்டிடம். அது
மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றை சுற்றி 70 வரி கம்பி வேலி. அதற்கு அடுத்து
சுருள் கம்பி வேலி. அதையடுத்து இன்னொரு 70 வரி அடிக்கப்பட்ட கம்பி வேலி.
மூன்றாகப் பிரிக்கப்பட்ட கட்டிடத்துக்கு பெரிய இரும்பு கேற். அதில் பெரிய பூட்டு.
அந்த கட்டிடத்தைச் சுற்றியுள்ள வளைகளில் 10 பேர்வரை நைலோன் கயிறுகளினால் கட்டித்
தொங்கவிடப்பட்டுள்ளனர். [illegible] அவர்கள் காலில் உள்ள சங்கிலியைத் தவிர
வேறு எதுவும் கிடையாது. அந்த கட்டிடத்துக்குள் 30பேர் வரை இருந்தார்கள். அங்கு
ஒரு திறந்தவெளிக் கக்கூசு. அதில் அங்குள்ள 30 பேரும் பார்த்துக்கொண்டிருக்க நாம்
மலம் கழிக்கவேண்டும். அங்கு இருந்த 30 பேரும் தாடி, தலைமுடி வளர்த்து காட்டு
வேடர்கள் போல் பயங்கரமாக காட்சியளித்தனர். நான் எனது காலைக்கடன்களை
ஒருவாறுமுடித்து பழைய வீட்டுக்கே சென்றுவிட்டேன்.

அன்று பிற்பகல் 5 மணியளவில் வீட்டுக்குள் இருந்த 35 பேரையும் மூன்றாகப் பிரித்து
கட்டிடத்தின் ஒரு பிரிவில் (10அடி நீளம் 10அடி அகலம்) விட்டனர். அங்கு எல்லோருக்கு
கஞ்சி உணவாக வழங்கப்பட்டதும் அனைவரையும் சங்கிலியால் கோர்த்து படுக்கவிட்டனர்.
10அடி நீளம் 10 அடி அகலமான அந்த அறையில் 35 பேரும் நிமிர்ந்து படுக்கவோ
அல்லது உடம்பை பிரட்டவோ முடியாது.

யாராவது நித்திரையில் வாய் புலம்பினால் யாரடா கதைத்தது உண்மையை சொல் என்று
கேட்பார்கள். நித்திரையில் வாய் புலம்புவோர் யார் என்பது எவருக்கும் தெரியாது.
யாருமே செல்லாவிட்டால் எல்லோரையும் வரும்படி கூறி பச்சை மட்டையால் அடிப்பார்கள்
யாராவது சொல்லிவிட்டால் அவனை மணலில்-வெய்யிலில்-மணித்தியாலக் கணக்கில் உருளவிடு
வார்கள். யாருக்காவது இரவில் வயிற்றால் போனால் அப்படியே இடக்கவேண்டியது தான்.

...../4

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடுத்த நாள் காலை 8 மணிக்கு ஒரு கைதியை கொண்டு 20 மேசை கதிரை கொண்டுவரச் செய்து 20 பேர் வரை வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு பேரைச் சொல்லி கூப்பிட்டு சிலர் விசாரிக்கப்பட்டனர். சிலபேருக்கு தண்ணீர் ஊற்றினார்கள். சிலரை அந்த வெய்யிலில் உருளவைத்தார்கள். சிலருக்கு அடி விழுந்தது. அவர்கள் ஐயோ, அம்மா அடியாதீர்கள் என்று கதறியவண்ணம் இருந்தனர். அவர்கள் ஊரில் உள்ள தெய்வங்கள் எல்லாரையும் அழைத்துப் பார்த்தார்கள். வீட்டில் உள்ள வளைகளில் சிலரை நைலோன் கயிற்றில் கையைக் கட்டி கால் பெருவிரல் நிலத்தில் முட்ட தொங்கவிட்டனர். இப்படியாக 11 மணிவரை சித்திரவதைகள் நடந்தன. பின்னர் எல்லோரையும் அடைத்துவிட்டு உப்பில்லாத கஞ்சியுடன் அவித்த பீற்றூட் அவித்த நீர் தருவார்கள். 2 மணியளவில் எல்லோரும் பெல்டுடன் வந்து முன்னர் விசாரித்தவர்களைக் கூப்பிட்டு சித்திரவதைகள் செய்தனர். 5 மணிக்கு மீண்டும் கஞ்சி. கஞ்சி குடித்ததும் எல்லோருக்கும் சங்கிலி கோர்க்கப்படும்.

அடுத்த நாளும் அதே விசாரணை சித்திரவதை தொடரும். அப்போது கேட்கப்படும் கேள்விகள்:

டேய் கற்பழித்தாயா?
டேய் கொள்ளையடித்தாயா?
யாரைக் காட்டிக்கொடுத்தாய்?
யாரை சுட்டாய்?
எங்கே ஆயுதம் வைத்திருக்கிறாய்?

இவற்றுக்கு ஏதாவது பதில் சொல்லியேயாகவேண்டும்.

<u>தண்டனை.</u>

பச்சை மட்டையால் முகம், முதுகு, முழுவதும் அடித்து மருந்து கட்ட இடமில்லாமல் முதுகுக்கு மருந்துச் சீலை போட்டு மூடிவிடுவார்கள்.

சீமென்ரால் கட்டப்பட்ட ஒரு படுக்கை. அதன் ஒரு பக்கம் உயரமாகவும் ஒரு பக்கம் பதிவாகவும் காணப்படும். அது 7 அடி நீளம் 4 அடி அகலம் கொண்டது. அதில் சங்கிலி மாட்டப்பட்டிருக்கும். அந்த மேடையில் கைதியின் தலை பதிவான பக்கமும் கால்கள் உயரமான பக்கமுமாக படுக்கவைத்து யேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டதுபோல் கால்களுக்கும் கைகளுக்கும் சங்கிலியால் பூட்டிவிடுவர். நெஞ்சிலும் பெல்ட் போட்டு அசையாமல் பூட்டுவர். தலை தவிர்ந்த உடலின் எந்தப்பாகமும் அசையாது. முகத்தில் மொத்தமான ரவல் போடப்படு! ரவலின் இரு புறமும் ஒருபர் காலால் இறுக்கி மிதித்தபடி முகத்தில் தண்ணீரை ஊற்றுவார்கள். மூச்சு விடமுடியாது. வாயால் அலறத்தான் முடியும். அலறும்போது உள்ளதைச் சொல்லும்படி கேட்பார்கள். செய்யாத குற்றத்தை செய்தாயா என்று கேட்பார்கள். இல்லை என்று சொன்னால் மீண்டும் தண்ணீர் ஊற்றுவார்கள். 8 முதல் 10 வாளி தண்ணீர் ஊற்றப்படும்.

<u>தண்டனை 4</u>

மேற்படி படுக்கையில் கட்டப்பட்ட நிலையில் 300 றாத்தல் நிறையுள்ள இரும்பு ././ இறுக்கப்பட்ட மரக்குத்தியை காலில் ஏற்றி தலை வரை உருட்டுவார்கள். பின்னர் கால்வரை உருட்டப்படும். இப்படி திரும்ப திரும்ப உருட்டுவார்கள். இதனால் கால் எலும்புகள் உடையும். காலில் தோல் உரியும்.

<u>தண்டனை 5</u>

ஒரு குளிக்கும் அறைபோன்று கட்டப்பட்ட கட்டிடம். அதனுள் காற்று போகாதபடி கண்ணாடி போடப்பட்டுள்ளது. அதனுள் கைதியை விட்டு மிளகாய் புகை செலுத்தப்படும். பதில் சொல்லாவிட்டால் மீண்டும் புகை போடப்படும். வெறும் உடம்புடன் உள்ளே உள்ளே விடப்பட்டவன் இருமி இருமி சில வேளைகளில் இரத்தமும் வாயால் வரும். இப்படியாக பல சித்திரவதைகள் அங்கு நடைபெறுகின்றன.

...../5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நாட்கள் கழிந்துவிட்டது. 01/09/90 அன்று பகல் 11 மணியளவில் விமானம் மூலம்
குண்டு வீசும் சத்தம் கேட்டது. வழக்கமாக குண்டு வீசும் விமானம், ஹெலி ஆகியன வரும்
சத்தம் கேட்டால் நாங்கள் இருக்கும் சிறைக்கூடத்து கதவுகளை பெரிய பூட்டு போட்டு
பூட்டிவிடுவார்கள். அன்றும் அதே போன்று பூட்டப்பட்டுவிட்டது. விமானத்திலிருந்து
போடப்பட்ட குண்டு ஒன்று நாங்கள் இருந்த சிறைக்கருகே விழுந்தது. சிறையில் இருந்த
வர்களெல்லாம் அண்ணை எங்களைக் காப்பாற்றுங்கோ எனக் கத்தினோம். ஆனால் அங்கு
காவலுக்கு இருந்தவர்கள் எல்லாம் அங்கிருந்து 300 மீற்றர் தூரத்துக் அப்பால் போய்
விட்டனர். அடுத்த குண்டு நாங்கள் முன்னர் இருந்த வீட்டில் விழுந்து அதன் சுவர் இடிந்தது.
அடுத்த குண்டு சிறையில் விழுந்தது. நான் வெளியே தூக்கி வீசப்பட்டேன். இச்சம்பவம்
நடந்தபோது அந் சிறைகளில் மொத்தம் 152 பேர் கைதிகளாக இருந்தோம். அந்த
குண்டு தாக்குதலில் 70 பேர் தான் தப்பினோம். ஆனால் அவர்களிலும் 17பேர்
கடுமையான காயங்களுக்குள்ளானார்கள் . நாங்கள் குண்டு வீச்சுக்கு பயந்து ஓடியபோது
புலிகள் எங்களை தப்பி ஓடுவதாக் கூறி எல்லோரையும் பிடித்து சங்கிலியால் கோர்த்து
150 மீற்றர் தூரத்தில் பனை மரத்துடன் கட்டி வைத்தனர். விமானங்கள் போகவில்லை.
எங்களை கட்டிவைத்துவிட்டு காயக்காரரை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணம் ஏதுமில்
லாமல் சென்று விட்டனர். பொம்பர் அடித்த இடங்களில் வெடிச்சத்தம் கேட்டது.
பின்னர் தெரிந்தது அவ் இடத்தில் ஒரு படுகாயங்களுடன் இருந்தவர்களை அவர்கள் சுடு
சுட்டுவிட்டார்கள். இரவு 11மணியளவில் ஒரு ரக்டர் வந்தது. அப்போது காயங்களுடன்
இருந்தவர்களில் சிலர் இரத்தப்பெருக்கால் மயங்கி கிடந்தனர். வந்த ரக்டரில் காயம்
அடைந்த 16 பேரையும் ஏற்றிச் சென்றனர். பின்னர் ஒரு மணிக்கு இரண்டு ட்ரக்டர்கள்
வந்தது. எங்கள் கண்களை கட்டி மீதி 54 பேரையும் அந்த ட்ரக்டரில் ஏற்றிக்கொண்டு
சென்று 15 மைல் தூரத்துக்கு அப்பால் ஒரு வீட்டில் கொண்டுபோய் படுக்கவிட்டனர்.

விடிந்துவிட்டது. அங்கேயும் 70 கைதிகள் இருந்தனர். இவர்கள் 45பேர் சிங்களப்
பொலிசார். அங்கே 5 நாட்கள் இருந்தோம். ஒரு இரவு 10 மணியளவில் ஒருவன்
வந்து டேய் நீங்கள் எல்லாம் நல்ல ஒரு இடத்துக்கு போகப்போகிறீர்கள் எனக் கூறி
எல்லாருடைய கண்ணையும் கட்டி ஒரு லொறியில் ஏற்றினான். பின் கதவு எல்லாம் மூடி
அடைக்கப்பட்டு லொறி புறப்பட்டு ஒரு மணிநேரை பயணம் செய்தோம். ஒரு இடத்தில்
எங்களை இறக்கினார்கள். அதுவரை லொறியில் அடைபட்டு இருந்ததால் நாங்கள்
வியர்வையில் குளித்துவிட்டோம். எல்லோரும் வரிசையாக அந்த சிறைக்குள் போனோம்.
அந்த வீடு வெளிக்கு புதுவீடு போல் காட்சியளித்தது. உள்ளே போனால் பெரும்
இரும்பு கேட் திறக்கப்பட்டது.

அது நாற்சதுர வீடு. அதனுள் இரண்டு பெரிய அறைகள். 14 சிறிய செல்கள்.
ஒவ்வொரு அறைக்கும் இரும்பு கேற். அதன் வெளிப்புறத்தில் பலகையால் செய்யப்பட்ட
கதவுகள். பெரிய அறையின் நீளம் 10அடி நீளம் 10அடி அகலம்இருக்கும். சிறிய
செல்கள் 7அடி நீளம் 2அடி அகலம் இருக்கும் அதில் 2அடி மலசல கூடத்துக்கு ஒதுக்கப்
பட்டுள்ளது. எனவே அறை 5 அடி நீளம் 2அடி அகலம் ஆகும். அது இருண்ட அறை
காலை 10மணி முதல் பி.ப.3மணிவரையும் வெளிச்சம் ஓரளவு இருக்கும். அந்த அறைகளி
இருப்பவர்கள் மாக்கணக்காக திறக்கப்படாது. அதனுள் இருப்பவர்களுக்கு தலை தாடி
வளர்ந்து தலையில் பேன் பிடித்த புண்ணுக்கு மருந்தின்றி ஒரே பிண நாற்றம் அடித்தது.
வருத்தம் வந்தால் மருந்து இல்லை.

ஒரு நேரம் சாப்பாடு. ஒவ்வொரு நாளும் கஞ்சி 4 மணிக்கு தருவார்கள். அதுதான்
எங்கள் வாழ்க்கை. அது போன்ற சிறையை ஜனநாயக நாடுகள் எங்குமே காணமுடியாது.
பசி என்று கத்தினால் கேற் கம்பிகளுக்குள்ளால் தடியால் அடிப்பார்கள். மூன்று
மாதங்கள் வரை இந்த சிறையில் நாம் படாத சித்திரவதைகள் எல்லாம்பட்டு டிசெம்பர்
மாதம் வேறு இடத்துக்கு என்னை கொண்டு சென்றார்கள். அங்கே சங்கிலியை வெட்டி
வேலைகள் செய்வித்தார்கள். என்னுடன் 500 பேர்வரை தங்டவாளம் களட்டுவது
சிலிப்பர் கட்டை களட்டுவது கல் உடைப்பது போன்ற வேலைகள் இரவு பகலாக
செய்தோம். நித்திரை கொள்வது சிறு நேரம் தான். இது ஒரு மாதம் ஒரு சோ
சவர்க்காரம் தருவார்கள். 150 பேருக்கு $1\frac{1}{2}$ கிலோ பருப்பில் கறி சமைத்து வெள்ளை

www.tamilarangam.net



அரிசி சோறு தருவார்கள். தப்பி ஓடமுயன்ற பலர் கைகால் உடைக்கப்பட்டு முடமாக்கப்பட்டுள்ளனர். அப்படி இருந்த போதிலும் அங்கு அனுபவித்த சித்திரவதைகளை விட தப்பிப்பது அல்லது இறப்பது என்ற முடிவுக்கு வந்தேன். அந்த இடத்தில் நான்கு மாதங்கள் வேலை செய்த பின்னர் அங்கிருந்து தப்பினேன்.

புலிகளின் சிறைகளில் உள்ளோருக்கு இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. 'எ'இல் இருந்து 'உநற்' 26 எழுத்துகளுக்கும் ஒரு எழுத்துக்கு 200 இலக்கம் வீதம் 26 எழுத்துக்களுக்கு 5200 இலக்கங்கள் கைதிகளுக்கு இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே 5000 க்கு மேல் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

## நான் தண்டனை கோருகிறேன்

நான்
அழுவதற்கு வரவில்லை - அவர்கள்
விழுந்த இடத்தில்
இன்னும்
உயிரோடு இருப்பவர்களே!
உங்களிடம் பேசத்தான்...
உங்களை நோக்கியும்
என்னை நோக்கியும்
நான்
வேண்டுவது இதுதான்...
இறந்து கிடக்கும்
நம்மவர்கள் பேராலே
கேட்கிறேன்...
தண்டனை அளியுங்கள்!

நமது
தந்தையர் நாட்டு மண்மீது
சிவப்பு ரத்தத்தை
சிதற வைத்தவர்களுக்கு
தண்டனை அளியுங்கள்!

யாருடைய
ஆணையின் பேரில் இந்த
அக்கிரமங்கள் நடந்தனவோ
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

இந்த சவங்களின்மீது
சிம்மாசனம் ஏறிய
அந்த துரோகிகளுக்கு
தண்டனை அளியுங்கள்!

மறப்பவர்களுக்கும்
இந்தக் கொடுமைகளை
மன்னிக்கச் சொல்பவர்களுக்கும்
தண்டனை கொடுங்கள்!

நான்
எல்லோருடனும்
கைகுலுக்க விரும்பவில்லை
ரத்தக்கறை படிந்த
கரங்களைத்
தொடுவதற்கே விரும்பவில்லை
நான்
தண்டனை கோருகின்றேன்......!

தூர தேசங்களுக்கு
அவர்களை
தூதுவராய் அனுப்புவதை
அமைதி வரும்வரை
அவர்களை
அறைகளில் அடைப்பதை
நான்
அடியோடு விரும்பவில்லை.

இங்கேயே...
இப்பொழுதே...
திறந்த வெளியிலே
நீதி வழங்குங்கள்!
அவர்களுக்குரிய தண்டனையை
என்
கண் முன்னே
நிறைவேற்றுங்கள்...!

— பாப்லோ நெருடா